www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஏழாம் வகுப்பு

பதிவு எண்

நேரம் : 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10**

1) மரம் வளர்த்தால் ________ பெறலாம்.
அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

2) காந்தியடிகள் எப்போதும் ________ப் பேசினார்.
அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை

3) காயிதே மில்லத் ________ பண்பிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.
அ) தண்மை ஆ) எளிமை இ) ஆடம்பரம் ஈ) பெருமை

4) அறம்+கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________
அ) அறகதிர் ஆ) அறுகதிர் இ) அறக்கதிர் ஈ) அறம்கதிர்

5) தேர்ந்தெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) தேர்+எடுத்து ஆ) தேர்ந்து+தெடுத்து
இ) தேர்ந்தது+அடுத்து ஈ) தேர்ந்து+எடுத்து

6) ________ ஒரு நாட்டின் அரணன்று.
அ) காடு ஆ) வயல் இ) மலை ஈ) தெளிந்த நீர்

7) கூடு கட்டத் தெரியாத பறவை ________
அ) காக்கை ஆ) குயில் இ) சிட்டுக்குருவி ஈ) தூக்கணாங்குருவி

8) செல்வத்தின் பயன் ________ வாழ்வு.
அ) ஆடம்பர ஆ) நீண்ட இ) ஒப்புரவு ஈ) நோயற்ற

9) மழை சடசடவெனப் பெய்தது - இத்தொடரில் அமைந்துள்ளது ________
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) தொழிலாகுபெயர் ஈ) பண்பாகுபெயர்

10) அடுக்குத் தொடரில் ஒரே சொல் ________ முறை வரை அடுக்கி வரும்.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

**II. பொருத்துக: 4×1=4**

11) நாற்று - பறித்தல்
12) நீர் - அறுத்தல்
13) கதிர் - நடுதல்
14) களை - பாய்ச்சுதல்

**III. ஏவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 6×2=12**

15) பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
16) உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
17) தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறுகள் யாவை?
18) நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?
19) இந்த உலகம் யாருக்கு உரியது?
20) விடுதலைப் போராட்டத்தில் காயிதே மில்லத் அவர்களின் பங்கு பற்றி எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



21) ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?
22) உருவக அணியை விளக்குக.
23) ஒரு பெயர்ச்சொல் எப்போது ஆகுபெயர் ஆகும்?

IV. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 2×3=6

24) திருநெல்வேலி நகர அமைப்புப் பற்றி எழுதுக.
25) இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?
26) சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன யாவை?

V. அடிபிறழாமல் எழுதுக: 4+2=6

27) "மாரியொன்று இன்றி"......... எனத் தொடங்கும் விருந்தோம்பல் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
28) 'நாடு' - என முடியும் குறளை எழுதுக.

VI. கடிதம் எழுதுக: 1×5=5

29) உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

VII. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி: 1×7=7

30) கட்டுரை எழுதுக: என்னை கவர்ந்த நூல்

(அல்லது)

"உண்மை ஒளி" படக்கதையை கதையாக சுருக்கி எழுதுக.

VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 5×2=10

31) தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.

அ) என் தாயார் என்னை __________ காத்து வளர்த்தார்.
(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)

ஆ) நானும் என் தோழியும் __________ இணைந்து இருப்போம்.
(இஞ்சி தின்ற குரங்கு போல / நகமும் சதையும் போல)

32) சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக:

அ) நெல்லையப்பர் கோவில் __________ உள்ளது?

ஆ) அறநெறிச்சாரம் பாடலை எழுதியவர் __________?

33) கொடுக்கப்பட்டுள்ள ஊரின் பெயர்களில் இருந்து புதிய சொற்களை உருவாக்குக:

அ) நாகப்பட்டினம்

ஆ) திருநெல்வேலி

34) கலைச்சொல் எழுதுக:

அ) CIVILIZATION

ஆ) RELIGION

35) தொடர்களில் அமைத்து எழுதுக:

அ) குறிக்கோள்

ஆ) வாழ்நாள்

-----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner